**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06012021-4035

Volume: 6

Issue: 1

Month: July

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 05.05.2021

Accepted: 19.06.2021

Published: 01.07.2021

Citation:
Chandiran, A. "Contradictions and Gaps in Silappathikara Reading." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 1, 2021, pp. 14–26.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i1.4035

*Corresponding Author:
chandiranacn@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Contradictions and Gaps in Silappathikaram Reading

**A. Chandiran**

*Assistant Professor, Department of Tamil PG & Research*
*Sacred Heart College (Autonomous), Tirupattur*
*Tirupattur District*

**Abstract -** Studies on Silappathikaram have been conducted regularly on various platforms. It continues to give readers ample space to continue reading from a variety of perspectives, from time to time, to political, religious, cultural, emotional, and theoretical, as editors and later editors and researchers in the context of modern theories. Thus, despite the fact that the syllabary has been scrutinized on sites and contents, it still causes gaps and contradictions in the readers' reading. The purpose of this article is to explore the explanations for the gaps and contradictions between the Kovalan Kannaki, Madhavi faction and the Kovalan Kannaki merger - the Kovalan Madhavi faction and the Kovalan Madhava faction - the loss of wealth - Peetanru, which occurred to me while reading Silappathikaram.

**Key Words:** Silappathikaram, Readings, Problems, Gaps, Contradictions, New Progress.

**References**

1. Iraikuruvanar, Silapil Pizhaiya? (ma.po.ciiku maruppu). (1983) (reprint-1), 88 TamPu chetty street, Chennai - 600 001.
2. Meenakshi Sundaranar, T. P. (2005). (First Edition), *Silappathikaram Citizens' Epic*, Kodambakkam, Chennai, Kavya Publication.
3. Nadarasan, T.S. (2015). (First Edition) *Silappathikaram Reread*, Chennai, New Century Book House (P) Ltd.,
4. Panchangam, K. (2010). (First Edition) *Literary Review (Panchangam Articles II)*, Kodambakkam, Chennai, Kavya Publication.
5. Sidambaranar, Sami., (2008) (first edition). *Silappathikarath Tamil Nadu*, Raiyapet, Chennai, Arivup Pathipakam.
6. Subramanian, Dr. S.V. Kaanal Vari, 2002 (First Edition). International Institute of Tamil Studies, Tharamani, Chennai (Ultkathamzhi Aaraichi Niruvanam).
7. Thirukuda Sundaram, Po., Silappathikaram (Sornammal Memorial Lectures), 1967 (First Edition), Annamalai University Tamil Nool Publication.

# சிலப்பதிகார வாசிப்பில் உள்ள முரண்பாடுகளும் இடைவெளிகளும்

***முனைவர் ஆ. சந்திரன்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர்

***ஆய்வுச்சுருக்கம்***

*சிலப்பதிகாரம் குறித்துத் தொடர்ந்து பல்வேறு தளங்களில் ஆய்வுகள் நடைபெறுகின்றன. உரையாசிரியர்கள் தொடங்கிப் பதிப்பாசிரியர்கள், அவர்களுக்குப் பிறகான ஆராய்ச்சியாளர்கள் நவீன கோட்பாடுகளின் பின்புலத்தில் ஆராய்ந்த திறனாய்வாளர்கள் எனக் கால – அரசியல் – சமயம் – பண்பாடு – உணர்வு – கோட்பாட்டுப் பின்புலம் முதலான பல்வேறுவிதமான சிந்தனைகளின் பின்புலங்களிலும் தொடர்ந்து வாசிப்பதற்கான விசாலமான இடத்தை அது வாசகர்களுக்குக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது. இவ்வாறு தளங்களிலும் – பொருண்மைகளிலும் சிலப்பதிகார பிரதி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருப்பினும் இன்றும் அப்பிரதி வாசகர்களின் வாசிப்பில் இடைவெளிகளையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்திக் கொண்டேதான் இருக்கிறது. சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகி, மாதவி பிரிவும் கோவலன் கண்ணகி இணைவு – கோவலன் மாதவி பிரிவும், கோவலன் செல்வ இழப்பு – பீடன்று என்பதன் முன்னும் பின்னும் உள்ள இடைவெளிகளும் முரண்பாடுகளும் என்பனவற்றிற்கான விளக்கங்களை அறிவதற்கான முயற்சியை முன்னெடுப்பதே இந்த கட்டுரையின் நோக்கமாகும்.*

***முக்கியச் சொற்கள்:*** *சிலப்பதிகாரம், வாசிப்பு சிக்கல்கள், இடைவெளிகள், முரண்பாடுகள், புதிய முன்னெடுப்புகள்*

## முன்னுரை

தேசிய காப்பியம், பெண்ணிய காப்பியம்; புரட்சிக் காப்பியம்; தமிழ் பண்பாட்டை வலியுறுத்தும் காப்பியம்; வர்க்க போராட் டத்தைச் சொல்லும் காப்பியம்; ஆணாதிக்கச் சிந்தனையை சொல்லும் காப்பியம் என வாசிப்பவரின் மனநிலைக்கு ஏற்ப கருத்துக்களைத் தரும் பன்முகத்தன்மை கொண்ட பிரதியாக உள்ளது சிலப்பதிகாரம்.

“பல்கால் பழகினும் தெரியா உள” ஒரு பிரதி இது. அதனால் தான் உரையாசிரியர்கள் தொடங்கிப் பதிப்பாசிரியர்கள், அவர்களுக்குப் பிறகான ஆராய்ச்சியாளர்கள் நவீன கோட்பாடுகளின் பின்புலத்தில் ஆராய்ந்த திறனாய்வாளர்கள் எனக் கால - அரசியல் - சமயம் - பண்பாடு - உணர்வு - கோட்பாட்டுப் பின்புலம் முதலான பல்வேறு விதமான சிந்தனைகளின் பின்புலங்களிலும் தொடர்ந்து வாசிப்பதற்கான விசாலமான இடத்தை அது வாசகர்களுக்குக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது. தொடர்ந்து வாசகர்களால் எதிரும் புதிருமான கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான பரந்த வெளியையும் அது கொண்டிருப்பதை நன்கு அறிவோம். பல பொருண்மைகளில் சிலப்பதிகாரப் பிரதி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு இருப்பினும் இன்றும் அப்பிரதி வாசகர்களின் வாசிப்பில் இடைவெளிகளையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கிறது. குறிப்பாக, கோவலன் மாதவியின் பிரிவிற்கான உண்மையான காரணம் என்ன? கோவலன் உண்மையில் வறுமையுற்றுதான் மதுரைக்குப் பயணம் மேற்கொண்டானா? “பீடன்று” என்ற கண்ணகி மௌனித்து இருப்பதன்

உண்மைப் பொருள் என்ன? கானல்வரி பாடலுக்குப் பிறகு பிரிந்து செல்லும் கோவலன் மாதவி ஆகியோரின் பதிவுகளில் உள்ள முரண்பாடு? கோவலன் மாதவியைப் பிரிந்ததற்கான காரணங்களாகக் கோவலன் வசந்தமாலை மற்றும் கண்ணகியிடம் சொல்லுவதிலுள்ள முரண்பாடும் அதற்கான காரணமும் என்ன? என்பன போன்ற பல வினாக்கள் எழுகின்றன. அவற்றில் கோவலன் கண்ணகி,

**மாதவி பிரிவும் கோவலன் கண்ணகி இணைவும்**

**கோவலன் மாதவி பிரிவும், கோவலன் செல்வ இழப்பும்**

**பீடன்று என்பதன் முன்னும் பின்னும் உள்ள இடைவெளிகளும் முரண்பாடுகளும்**

என்பனவற்றிற்கான விளக்கங்களை அறிவதற்கான முயற்சியை முன்னெடுப்பதே இந்த கட்டுரையின் நோக்கமாகும்.

## கோவலன் கண்ணகி, மாதவி பிரிவும் கோவலன் கண்ணகி இணைவும்

பெற்றோர் முன்னின்று நடத்திய திருமணத்தில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வரும் கோவலன் கண்ணகியைவிட்டுப் பிரிந்து மாதவியிடம் செல்லுகிறான். பின்னர் மாதவியைவிட்டுப் பிரிந்து மீண்டும் கண்ணகியிடம் வந்து சேருகிறான். கோவலன் கண்ணகி ஏறக்குறைய எட்டு ஆண்டுகள் மகிழ்ச்சியாக வாழ்ந்ததாகவும் பின்னர் கோவலன் மாதவியோடு சேர்ந்து 12 ஆண்டுகள் மகிழ்ச்சியாக வாழ்ந்ததாகவும் அறியமுடிகிறது. கண்ணகியோடு வாழ்ந்தவன் ஏன் நிரந்தரமாக வேறொரு (மாதவி) பெண்ணோடு 12 ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்தான்? 12 ஆண்டுகள் வாழ்ந்த பெண்ணைவிட்டு ஏன் மீண்டும் கண்ணகியை நோக்கி அவன் பயணம் நகர்ந்தது? இரண்டு பெண்களிடம் அவன் கண்ட குறைகள்தான் என்ன? அல்லது அவ்விரு பெண்களுடனான அவனது பிரிவிற்கான உள்ளார்ந்த உண்மையான காரணந்தான் என்ன? என்பது குறித்து விரிவாக ஆராய வேண்டியுள்ளது.

**மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்**
**தீவலஞ் செய்வது காண்பார்...**

**(சிலம்பு.1:52,53)**

கண்கள் முன்பு என்ன தவம் செய்தனவோ? என எண்ணும்படியாக கோவலன் கண்ணகி திருமணம் ஆடம்பரமான முறையில் நடைபெறுகிறது. பின்னர் இருவருக்கும் தனியான ஒரு மாளிகையில் இல்லறத்தைத் துவங்குகின்றனர். கோவலன் கண்ணகியின் மீது மிகுதியான அன்பு செலுத்துகிறான். அவளது அழகில் மயங்கிக் கிடக்கிறான்.

மாசறு பொன்னே வலம்புரி முத்தே (சிலம்பு.2:73-81) என்றெல்லாம் புகழ்ந்து அவளை வருணிக்கும் கோவலன் யாண்டு சில.... (சிலம்பு.2:89) அதாவது, உரையாசிரியர்கள் கூறுவதுபோல, 8 ஆண்டுகள் மகிழ்ச்சியுடன் இல்லறம் நடத்திய கோவலன்[1] ஆடல் கலையில் சிறந்து விளங்கும் மாதவியைக் கண்டதும் அவளது அழகில் மயங்கி அவள் உடனே சென்று சென்று விடுகிறான்.

கண்ணகியிடம் இல்லாத எது மாதவியின் பால் அவனை ஈர்த்தது என்று மேலோட்டமாகப் பார்க்கிறபொழுது அவள் ஆடல் கலை, அழகு என்பதைத் தவிர வேறு எந்த காரணத்தையும் காப்பியம் சொல்லவில்லை என்பது வெளிப்படை. ஆனால், “கோவலன் பிரிவுக்குக் காரணம் கண்ணகி மலடியாக இருந்தது தான் என்றும் தமிழ்ப்புலவர்கள் நடுவில் அவள் விமர்சிக்கப்பட்டுள்ளாள்”[2] என்பதையும் முற்றிலும் மறுப்பதற்கில்லை. மறுபுறம் தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில், “கற்பின் குறியீடாகவே அவள் இன்றும் கலந்து விளங்குகிறாள் என்பது மறுத்து ஒதுக்கிவிட முடியாது”. காரணம், தமிழ் வாசகர்களிடையே அவள் அவ்வாறுதான் உரையாசிரியர்கள்

தொடங்கித் தொடர்ந்து அறிமுகப்படுத்தப்பட்டு வரப்படுகின்றாள். ஆனால் அக்கால கற்பு என்பதற்கு உண்மையான பொருள் ஆணுக்கு அடிமையாக இருப்பது என்பதுதான்[3] என்பதை மறந்துவிட முடியாது.

இவற்றையெல்லாம் கவனத்தில்கொண்டு சிலப்பதிகாரத்தை நாம் வாசிக்கிறபொழுது கோவலனின் பிரிவிற்கான உண்மையான காரணத்தை விளங்கிக்கொள்ள முடிகிறது. அதை மாதவியைவிட்டுப் பிரிந்த கோவலனின் உரையாடலிலிருந்து தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

வசந்தமாலை கொண்டுவரும் மாதவியின் மடலைக் கோவலன் வாங்க மறுக்குமிடம், மாதவியை விட்டுப் பிரிந்து கண்ணகியிடம் மீண்டும் திரும்பி வருமிடம், ஆகிய இந்த இரு இடங்களிலும் கோவலன் பேசும் உரையாடலில் உள்ள செய்திகளை ஒப்பிட்டுப் பார்த்தால் அது தெளிவாக விளங்கும். முதலாவதாக, வசந்தமாலையிடம் மாதவியின் மடலை வாங்க மறுப்பதற்கான காரணங்களாக,

1. அழகால் தன்னை மயக்கி, வருகென வந்தும் போகென போகிய கரிய நெடுங்கண் மாதவி நடிப்பு (சிலம்பு. 8:75 -85)
2. கிளி போன்ற மலடி சொல்லையும் அன்னத்தின் நடையையும்கொண்டு ஏவலாளர்கள்போல் தனியே என்முன் வந்து நடித்தவள் ( சிலம்பு.8:86-90)
3. தன்னை அணைத்துக் கொள்ளாமல் விலகி நின்று நடனம் ஆடியது (சிலம்பு 8: 91 - 95)
4. தான் (கோவலன்) சொல்லி அனுப்பிய புணர்ச்சிக் குறிப்பை அவள் அலட்சியப்படுத்தினாள் (சிலம்பு.8: 96 - 100)
5. அவளைப் பிரிந்துதான் (கோவலன்) தனியாக இருந்த வேளையில் தன்னுடைய உறவினர்கள் நம்பும்படியாக அவள் வருத்தத்தோடு இருப்பதாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டாள் (சிலம்பு.8: 101 -105)

என்பனவற்றைக் கூறும் கோவலன் அடுத்து, கண்ணகியை பார்க்க இரவில் சென்ற பொழுது,

**“.............................யாவும்**
**சலம் புணர் கொள்கை சலதியோடு ஆடி**
**குலம் தவறு வான்பொருள் குன்றம் தொலைத்த**
**இலம்பாடு நாணத் தகும் எனக்கென்ன**
**(சிலம்பு.9: 68 – 71)**

என்று தன்னுடைய தவற்றுக்காக வருந்தி நிற்கிறான்.

கோவலன், மாதவி தொடர்பாக வசந்தமாலையிடம் பேசுகிற முதல் உரையாடலில், தன்னுடைய செல்வத்தை மாதவி அபகரித்துக் கொண்டாள் என்றோ, அவளால்தான் செல்வத்தை இழந்து வாடுகிறேன் என்றோ கருதும் அளவிலான எவ்வித குறிப்பும் இடம் பெறவில்லை என்பதை அறியமுடிகின்றது. ஆனால், கண்ணகியிடம் பேசுகிறபொழுது தன் தன் முன்னோர்கள் சேர்த்துவைத்த செல்வம் அனைத்தையும் பரத்தையரால் இழந்தேன் என்பதாகக் கூறுவதாக உள்ளது. இவ்விரு உரையாடல்களையும் ஒப்பிட்டுப் பார்க்கிற பொழுது இந்த இடத்தில் ஒரு கேள்வி எழுகிறது “யாவும் சலம் புணர் கொள்கைச் சலதி” என்று கடுமையான சொற்களால் கோவலன் சுட்டியது மாதவியையா அல்லது வேறு பரத்தையரையா? என்பது. இது சிந்திக்க வேண்டிய ஒன்று.

இந்த இரு உரையாடல்களிலிருந்து, மாதவியோடு கோவலன் வாழ்ந்த காலத்தில் அவளால் அவனது செல்வம் குறைந்தது என்பது பற்றியோ அல்லது மாதவி கோவலனின் செல்வத்தைக் கவர்ந்துகொண்டு அவனை உதாசீனம் செய்தாள் என்பதற்கான எந்தக்

குறிப்பும் காப்பியத்தில் இடம் பெறவில்லை என்பதை அறிய முடிகின்றது. அப்படி எனில், கோவலன் பிரிவுக்கான உண்மையான காரணம் மாதவி தன்னை மதிக்கவில்லை என்பதுதான் என்பது தெளிவாகத் தெரிகிறது. மேலும், இதைக் கடலாடு காதை, இந்திரவிழா ஊரெடுத்த காதை, கானல்வரி காதை, ஊர்காண் காதை ஆகிய நான்கு காதைகளில் இடம்பெற்றுள்ள குறிப்புகளிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது.

அரங்கேற்று காதையில் இறுதியில், ஆயிரம் கழஞ்சு பொன் கொடுத்து இம்மாலையை வாங்குபவர்கள் நம் கொடி போன்ற மாதவிக்கு மணமகனாவார் (சிலம்பு.3:166,67 என்று கூனியின் அறிவிப்பை ஏற்று

**கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு**
**மணமனை புக்கு மாதவி தன்னொ**
**டணைவுறு சைகலி னயர்ந்தனன் மயங்கி**
***(சிலம்பு. 3:171 -73)***

கோவலன் மாதவியின் அன்பு வாழ்க்கை மலர்கிறது. அந்திமாலைச் சிறப்புச் செய்க் காதை முழுமைக்கும் அவர்களின் (கோவலன் மாதவியின்) வாழ்க்கை விவரிப்பு சொல்லப்படுகிறது.

கோவலன் மாதவி வீடே தஞ்சம் என்றிருந்தாலும் அவளுடனேயே எப்போதும் இருந்தான் என்பதில்லை. அவன் எப்போதும்

**வறுமொழி யாளரொடும் வம்பப் பரத்தரொடுங்**
**குறுமொழிக் கோட்டித் திரிந்தாக**
***(சிலம்பு.16:65 – 70)***

அவனே கூறுகின்றான் என்பதிலிருந்து இது தெளிவாகிறது. அது குறித்து மேலே பார்த்தோம்.

மேலும், இந்திர விழா ஊர் எடுத்த காதையில், தன் காதல் கணவனைப் பிரிந்து வேறு படாத அலர் எய்தாத மகளிர் அணியும் வளைந்த மகர குறையுடன் மாதவி இருந்தாள். பழிச்சொல் ஏற்படாதவாறு வளைந்த தலை உடைய குருக்கத்தி எனும் மாதவி கொடி போல் மாதவி இருந்தாள். காம இன்பத்தால் மகிழ்வெய்தி காதலர்கள் விரும்பும் நறுமணம் கொண்ட தூம் பொதிகள் நிறைந்த பொழில் இடத்தில் விளையாட அமர்ந்தாள் (சிலம்பு.5:186-195) என்று மாதவியைப் பற்றி மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. கோவலனைப் பற்றிய குறிப்பு, கோவலன் பாணரொடும், பரத்தரொடும் திரிந்தது போல் காவரிப்பூம்பட்டினத்தில் தென்றல் உலவியதாக (சிலம்பு.5:200,201) காப்பியக் கதைசொல்லியால் கூறப்படுவதைத் தவிர்த்து அந்த காதையில் கோவலன் மாதவி இணைந்து இருந்தது பற்றிய குறிப்புகள் எதுவும் இல்லை என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

மாதவியுடன் வாழ்ந்த காலத்திலிருந்து பிற பரத்தையரோடு காமத்தில் ஆழ்ந்துகிடந்த கோவலன், மதுரை வந்த பின்னரும் சென்ற காரியத்தில் கருத்துடையவனாக இருக்கவில்லை. கவுந்தியடிகளுடனும் கண்ணகியுடனும் மதுரைக்குப் புறத்தேயிருந்த பள்ளி ஒன்றில் தங்கிய கோவலன் மறுநாள் காலையில் கவுந்தியடிகளைத் தொழுது, தொன்மையான மதுரை மாநகரிலுள்ள பெரு வணிகர்களுக்கு (மன்னர் பின்னோர்) எனது நிலையை அறிவித்துத் திரும்ப வருகிறேன் (சிலம்பு.14:20-24) என்று கூற, அவனுக்குச் சில அறிவுரைகளைக் கூறி ஆறுதல் படுத்திய அவள், மன்னரின் மாநகர் சென்று தங்குவதற்கு ஏற்ற இடத்தை அறிந்து வருக (சிலம்பு.14: 61) என்று வழியனுப்புகின்றாள்.

கண்ணகியைக் கவுந்தியடிகளின் பாதுகாப்பில் விட்டு கோவலன் மதுரை மாநகரை நோக்கிச் செல்லுகிறான். அவன் சென்ற நோக்கம் தன் இனத்தாராகிய வணிகரைக் கண்டு பேசி தான் தங்க வீடும் வாணிகம் செய்யக் கடையும் ஏற்பாடு செய்யவேண்டும் என்பது. ஆனால் அவன் அந்த நோக்கத்தின்படி

நடக்கவில்லை என்பது மட்டுமன்று. அதை அறவே மறந்துவிடவும் செய்தான்.

அவன் போன காரியம் வேறு. செய்த காரியம் வேறு. அவன் அன்று காலை முதல் மாலைவரை நகரத்தில் வீதி தெரு. முடுக்கு எல்லாவற்றிலும் அலைந்து திரிந்தான். ஆனால், அவன் அந்த நகரத்திலிருந்த அறங்கூறவையம், பள்ளிகள், கோயில்கள், பட்டிமன்றம் முதலிய எதையும் பார்க்கவில்லை. அவன் நின்று சுவையாகப் பார்த்த வீதிகள் ஏழே என்றே இளங்கோவடிகளும் ஊர்காண் காதையில் வருணிக்கின்றார். அந்த வீதிகளை அடியார்க்கு நல்லார் இளங்கோ வடிகள் கூறும் அடைமொழிகளுடன் தனியாக எடுத்து எழுதுகின்றார். அவை 1. மகிழ்தரு வீதி. 2. இருபெரு வீதி, 3. அங்காடி வீதி, 4. பயங்கெழு வீதி, 5. நலங்கினர் வீதி, 8, அறுவை வீதி, 7. கூலவீதி ஆகியனவாகும்.

இவற்றுள் மூன்று வீதிகளே அடைமொழிகளுடன் காணப்படுகின்றன. மகிழ்தரு வீதி என்பது பரத்தையரில் தாழ்ந்தவராகவுள்ள கடை கழி மகளிர் வாழுமிடம், பயங்கெழு வீதி என்பது பலவகை இரத்தினங்கள் விற்கும் கடைத்தெரு, நலங்கினர் வீதி என்பது நாலுவகைப் பொருள்கள் விற்கும் கடைத்தெரு, இவ்வாறு இளங்கோவடிகள் இந்த மூன்று வீதிகளுக்கே அடைமொழி கொடுத்ததிலிருந்து கோவலன் அந்த வீதிகளைப் பார்ப்பதிலேயே அதிகப் பிரியமுடையவன் என்று விளங்கும்[4]. மேலும், கோவலன் பார்த்த ஏழு வீதிகளையும் ஏறக்குறைய 150 வரிகளில் வருணிக்கும் இளங்கோவடிகள் மகிழ்தரு வீதிக்கு மட்டும் 78 வரிகள் பயன்படுத்தியுள்ளார். இந்த குறிப்பிலிருந்து கோவலன் அந்தக் காமுகர் வீதியிலேயே அதிக நேரத்தைக் கழித்தான் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இக்கருத்தை உறுதி செய்யும்விதமாக, இதுதான் மதுரையா? அல்லது, பழைய மனநிலை காரணமாக அப்படி அவனால் அறியப்பட்ட மதுரையா? எப்படியாயினும் அவன் என்ன காரணம் சொல்லிப் போனானோ, அதனை அவன் செய்யவில்லை. மன்னர் பின்னோரைக் கண்டு அவன் தன்னிலையைக் கூறவில்லை. அவர்களுடைய வழிகாட்டுதலையோ உதவியையோ பெறவில்லை. கோவலனுடைய தோல்வியின் முன்புலம், இது. இதனால்தான் அவன் மிக எளிதாகப் பொற்கொல்லனுடைய வலையில் வீழ்ந்துபோகிறான். வீழ்ச்சிக்குக் காரணம் கோவலன் தான்[5] என்ற தி.சு.நடராசன் அவர்களின் கருத்தையும் இணைத்துப் பார்க்க, மிகவும் பொருத்தமுடையதாக இருப்பதை அறியலாம். அதற்கடுத்து, கடலாடு காதையில், அகத்திய முனிவரால் சாபம் பெற்று மண்ணில் பிறந்த ஊர்வசியின் வழியில் வந்தவளாக மாதவியின் குலப்பெருமைகயிலைமலையிலிருந்துவந்த விஞ்சையன் தன் காதலிக்குக் கூறுவதாகச் சொல்லப்படும் (சிலம்பு.6:20-25) மாதவியின் ஆடல் நிகழ்வு நடைபெறுகிறது. அவள் அவ்வாறு ஆடும் காலத்தில் தோன்றும் பாவரசம் நிறைவுபெற்றன. மாதவியின் ஆடல் பிறரைக் கவருமாறு அமைந்து இருந்ததால் கோவலன் சற்றே ஊடல் கொண்டான் (சிலம்பு.6:74,75). அந்த ஊடலை, கூடலும் ஊடலும் கோவலனுக்கு அளித்து மலர்கள் விரித்த கட்டில் அமைந்த படுக்கை அறையில் மாதவி தன்னுடைய ஆளுகையால் போக்கினாள். என்றாலும், அவனது உண்டான அவளைப் பற்றிய மதிப்பீட்டை அவளால் நிரந்தரமாகப் போக்க முடியவில்லை.

அதன் தொடர்ச்சியே, கடல் விளையாட்டைக் காண விரும்பிய அவள் கோவலனை வேண்டி அழைக்க வேண்டி நிலைக்குத் தள்ளப்படுகிறாள் (சிலம்பு.6:113,114). இவ்வாறு,

1. தன்னுடைய சொல்லை மீறி பொது வெளியில் மாதவி நடனமாடியது.
2. தான் விரும்பிய பொழுதெல்லாம் தன்னுடன் இன்பம் துய்க்க மறுத்தது.
3. கோவலன் காமுகனாகத் தொடர்ந்து

பரத்தையர்மீது விருப்பம் கொண்டவனாக இருந்தான் என்பது.

என்ற மூன்று விதமான கருத்துக்களே கோவலன் மாதவிக்கிடையில் விரிசலை ஏற்படுத்துவதற்கான காரணிகளாக இருந்தன என்பதை அறிய முடிகிறது. என்றாலும், இவற்றில் "தன்னுடைய சொல்லை மீறி மாதவி நடந்துகொண்டதுதான் அவன் உள்ளத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. அதன் விளைவு அவனுக்குக் கண்ணகியின் நினைப்பு உள்ளத்தில் மேலோங்க ஆரம்பித்தது. அதைத்தான் அவன் கானல்வரியில் வெளிப்படுத்தினான். அவனது அந்த வெளிப்பாட்டை தவறாகப் புரிந்துகொண்ட மாதவி அதற்கு எதிரான கருத்து கொள்ளும் படியான பாடலைப் பாடினாள்.

ஏற்கனவே அவள் தன்னை மதிக்கவில்லை என்று கருதிய கோவலனுக்கு அது மேலும் கோபத்தைத் தர அவளிடமிருந்து பிரிந்து வெளியேறுகிறான்.

இந்த இடத்தில் இன்னொரு செய்தியையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். காப்பிய ஆசிரியரால் சொல்லப்படும் கோவலன் மாதவியைவிட்டுப் பிரிவது தீவினையால் நிகழ்ந்தது என்பது. அது,

> **கானல்வரி யான் பாடத்**
> **தானொன்றின்மேல் மனம் வைத்து**
> **மாயப்பொய் பலக்கூட்டு மாயத்தாள் பாடினாளென**
> **யாழிசைமேல்வைத்துத்தனூழ்வினைவந் துருத்ததாகலின்**
> **உவ்வுற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக்கை ஞெகிழ்ந் தன்னாயப்**
> **பொழுதீங்குக் கழிந்ததாகலி னெழுது மென் றுடனெழா**
> **தேவலாள ருடன் சூழ்தரக் கோவலன் தான் போன. (சிலம்பு.7:52,7)**

என்று கூறப்படுகிறது. என்றாலும், இந்த இடத்தில் கோவலன் பிரிந்து செல்லும்போது அவனுடன் பணியாளர்கள் இருந்தார்கள் (சிலம்பு.7:52,7) என்று குறிக்கப்படுவது கவனிக்கத்தக்கது. இன்னொன்று இந்தக் கானல்வரி பாடலில் முதலில் பாடத்தொடங்கியவன் கோவலன். அவன் பாடிய ஆற்று பரிபாடலுக்கு எதிர்ப் பாடலைத்தான் மாதவி பாடுகிறாள். அந்த அளவில் இருவருக்கும் இடையிலான உரையாடல் நிறைவு பெறுகிறது.

ஆக, கோவலனின் கானல் வரிப் பாடலுக்கான உண்மையான காரணங்கள் இந்திரவிழா ஊரெடுத்த காதை, கடலாடு காதை ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள மேலே பார்த்த கோவலன் மாதவிக்கிடையிலான விரிசலின் தொடர்ச்சியே என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. காப்பிய ஆசிரியர் கூறும் கோவலனின் ஊழ்வினை என்பது சென்ற பிறவியின் தொடர்ச்சி என்பதை அல்ல. அது இந்தப் பிறவியில் அவன் செய்து வந்த தொடர்ச்சியான செயல்பாடுகளின் விளைவே என்பது தெளிவு.

இதை, இளங்கோவடிகள் அரசன் காமவயத்தனாய் இருந்தபடியால் அவ்வாறு பணித்தான் என்று கூறாமல், ஊழ்வினை உண்மையால் பணித்தான் என்று கூறுவது. கோவலன் இறந்ததற்குக் கோவலன், கொற்றவன் இருவருடைய காமமே காரணம், ஊழ்வினையன்று.

ஆகவே பண்டைப் பிறவிகளில் செய்த ஊழ்வினை உருத்துவந்து ஊட்டவில்லை. இந்தப் பிறவியில் செய்த ஊழ்வினையே உருத்து வந்தூட்டிற்று[6] என்று ஊழ்வினை என்ற தலைப்பில் திரிகூட சுந்தரம் தெளிவாக விளக்கி இருப்பதிலிருந்தும் நாம் விளங்கிக் கொள்ளலாம்.

இதுவரை பார்த்த செய்திகளிலிருந்து ஒன்று தெளிவாக விளங்குகிறது. கோவலனுக்கு அடங்கி ஒடுங்கி இல்லாத மாதவியின் குணமே கோவலன் மாதவி பிரிவதற்கான முக்கியமான காரணியாக அமைந்தது

என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. சுருக்கமாகச் சொல்வதானால், "மாதவி தன்னை மதிக்கவில்லை" என்ற காரணம் ஒன்றே கோவலனை மாதவியிடம் இருந்து பிரித்தது எனத் திடமாகச் சொல்லலாம்.

### கோவலன் மாதவி பிரிவும், கோவலன் செல்வ இழப்பும்

மாதவியிடம் தன்னுடைய செல்வத்தையெல்லாம் இழந்தான். அதனால்தான் கோவலன் மாதவியைவிட்டுப் பிரிந்து சென்றான் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. ஆனால், கோவலன் மாதவியோடு இருந்த காலங்களில் தொடர்ந்து அவன் செல்வச் செழிப்போடு இருப்பதாகவே சுட்டப்படுகிறது. இது கடல் துறைக்கு செல்லும் கோவலன் மேகம் போன்ற கொடைத் தன்மை உடைய கோவலன் ஒரு சாதி குதிரையில் ஏறினான். மாதவி தனியான ஒரு மூடு வண்டியில் ஏறிச் சென்றாள் (சிலம்பு.6:119,120) என்பதிலிருந்தும். கானல் வரியில் மாதவியை விட்டுப் பிரிந்து சென்றபொழுது "கோவலன் பல பணியாளர்களுடன் சென்றான் என்பதிலிருந்தும், வசந்தமாலையிடம் மாதவியின் கடிதத்தை வாங்க மறுப்பதற்கான காரணங்களில் மாதவியால் வறுமையுற்றேன் என்று கூறப்பட்டிருக்கவில்லை என்பதிலிருந்தும் அறிந்துகொள்ள முடிகின்றது.

மேலும், மாதவி தொடர்ந்து ஆடல் கலையை நிகழ்த்திக்கொண்டே இருந்திருக்கிறாள் என்ற செய்தியும் அறியமுடிகிறது. அதனால், தொடர்ந்து அவளுக்குப் பொருளாதார தேவை பூர்த்தியடைந்திருக்கும். அவள் பொருளாதார தன்னிறைவு உடையவளாக இருந்திருப்பாள் என்பதை யூகிக்க முடிகின்றது.

இப்படிப்பட்ட சூழலில் கோவலனின் வறுமையின் பின்புலம் என்ன? என்பது குறித்து ஆராய வேண்டியுள்ளது. காரணம், கோவலனின் வறுமையடைந்தது மாதவியால் தான் என்பது அறிஞர்களின் கருத்தாக இருக்கிறது. அதற்கு அவர்கள், சலம் புணர் கொள்கை சலதி' என்பதைத் தான் காப்பியத்தில் இருந்து எடுத்துக் காட்டுகிறார்கள்[7]. அவ்வாறு பொருள் கொண்டால் இரண்டுவிதமான பிழைகள் காப்பியத்தில் இருப்பதாக நாம் நினைத்துக் கொள்ள வேண்டி வரும்.

ஒன்று கோவலன் முன்னுக்குப் பின் முரணாகப் பேசினான்.

இரண்டு இளங்கோவடிகள் காப்பியத்தில் பிழை செய்துள்ளார்.

ஆனால் இரண்டுமே நடந்திருக்காது என்பது தான் உண்மை. எனில், கோவலன் கூறிய பொருள் இழ்ப்பிற்கானக் காரணங்களை மாடல மறையோனிடமிருந்து ஆராய வேண்டியுள்ளது.

அடைக்கலக் காதையில், கோவலனின் கொடை பண்புகளாக ஒரு நீண்ட பட்டியலை மாடல மறையோன் தருகிறான். அந்தப் பட்டியலில், தன் மகள் (கோவலன் - மாதவி) மணிமேகலைக்கு பெயரிடும் நாளில் மாதவியோடு புண்ணியதானம் தருமங்கள் செய்தது (சிலம்பு.15:30-45). பெரும் செல்வம் கொடுத்து வடதிசை நோக்கிச் சென்ற மாமறையாளனின் மனைவியின் துயரைப் போக்கியது (சிலம்பு15:55-65). கொலைத் தொழில் செய்தவளின் பெரும் துயரைப் போக்க தான தருமங்களையும், வேள்விகளையும் செய்தது (சிலம்பு.15:71-75). பொய்ச் சாட்சி கூறி பூதத்தின் கையால் இறந்துபோன கள்வனின் சுற்றத்தவர்களுக்குப் பொன்னும் பொருளும் கொடுத்தது (சிலம்பு.15:76 - 95) என அந்த நீண்ட பட்டியல் மாடல மறையோனால் கோவலனைப் புகழ்ந்து உரைக்கின்ற பின்புலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதும், மாதவிக்கு பிறந்த தன்னுடைய மகளின் (மணிமேகலை) பிறந்தநாள் விழாவிற்குச் செலவழித்தது

தவிர்த்த, பிற செலவுகள் அனைத்தும் அவனுடைய விருப்பத்திற்கு ஏற்ப செலவு செய்யப்பட்டிருப்பதும், அவை எந்தவிதத்திலும் மாதவியோடு எவ்வித தொடர்பும் அற்று இருப்பதும் கவனத்தில் கொள்ள வேண்டியது. மேலும், இந்த இடத்தில் கருணை மறவன், இல்லோர்ச் செம்மல் முதலான அடைமொழிகள் மாடலன் வாயிலாக்க் கோவலனின் நற்பண்புகளாகச் சொல்லப்படுவதில் உள்ள அரசியலையும் தவிர்த்துவிட இயலாது.

அதே அடைக்கலக் காதையில் நான் வீண் வம்புகளைப் பேசுபவர்களுடனும் (வறுமொழியாளர்) வம்பு செய்யும் பரத்தைகளுடனும் (வம்பப் பரத்தை) கூடி அவர்கள் பிறரைப் பழித்துக் கூறும் கூறும் குறுமொழிகளைக்கேட்டு பெரிதும்நகைப்பு கொண்டேன். பொறாமையுடன் (பொச்சாப்பு) பொருளற்ற வார்த்தைகளைப் பேசுபவர்களும் சேர்ந்தேன். இவ்வாறான தீய ஒழுக்கத்தை மேற்கொண்ட எனக்கு நல்லபடியாக வாழும் நல்வழி தான் உண்டோ? (சிலம்பு.15:60-66)" என்று கோவலன் தன்னுடைய வேதனையைக் கண்ணகியிடம் கூறும் இடத்தில் அவனது வாய்மொழியாகவே அது வெளிப்படுகிறது. மாடல மறையோன் மற்றும் கோவலனின் இந்த உரையாடல்களிலிருந்து கோவலனின் செல்வச்செழிப்பானது அவனதுதனிப்பட்ட விருப்பத்தின் காரணமாகவே செலவழிக்கப்பட்டுள்ளது என்பதையும், அதில் மாதவிக்கு எவ்வித தொடர்பு இல்லை என்பதையும் அறிய முடிகிறது.

வசந்தமாலையிடம் கோவலன் கடிதத்தை வாங்க மறுக்கின்ற இடத்தில், மாதவியைப் பிரிந்து கோவலன் தனியாக இருந்தான் (சிலம்பு 8:100-05) என்ற குறிப்பையும் இந்த இடத்தில் இணைத்துப் பார்க்க வேண்டி உள்ளது. இந்தக் குறிப்பிலிருந்து மாதவியைப்விட்டுப் பிரிந்ததற்கும், கண்ணகியுடன் மீண்டும் இணைவதற்கும் இடையில் கோவலன் சிலகாலம் வேறு பெண்களுடன் வாழ்ந்திருக்கிறான் என்பதை அறியமுடிகின்றது. அத்துடன், மாதவியுடன் இணைந்து இன்பமாக வாழ்ந்துவந்த கால கட்டத்தில் கூட அவன் தென்றல் போலப் பரத்தனாக பல பெண்களுடன் உறவுகொண்டு வந்துள்ளான் என்பதையும் நாம் இந்த இடத்தில் இணைத்துப் பார்க்க வேண்டியுள்ளது. இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்துப் பார்க்கிறபொழுது அவனது செல்வம் எவ்வாறு செலவழிந்து இருக்கும் என்பதை அறிய முடியும்.

### பீடன்று என்பதன் முன்னும் பின்னும்

அடுத்து சிலப்பதிகாரத்தில் பார்க்கக் கூடியது "பீடன்று" என்ற கண்ணகியின் வெளிப்பாட்டின் முன்னும் பின்னும் உள்ள அரசியல். கோவலனின் பிரிவை எண்ணி வருந்திக்கொண்டுள்ள கண்ணகியைப் பார்க்க வரும் தேவந்தி, "சோம குண்டம், சூரிய குண்டம் துறை மூழ்கி அருகிலுள்ள காமவேள் கோட்டத்தை வழிபட்டால் பிரிந்த தம்பதியினர் கூடிவிடுவார்கள். ஆகவே, நாமும் சென்று அதைச் செய்து வருவோம். வா!" என்று கண்ணகியைத் தன்னுடன் வருமாறு அழைக்கிறாள்.

அதற்குக் கண்ணகி "பீடன்று" என்ற வார்த்தையை அதற்குப் பதிலாக சொல்லுகிறாள்.

"பீடு அன்று" என்ற கண்ணகியின் இந்தக் கூற்றுக்கு பொ. வே. சோமசுந்தரனார்[8]

> **"அங்ஙனம் சுனை மூழ்கித்தெய்வம் தொழுதல்**
> **எம்மனோர்க்கு இயல்பாகாது கண்ண"**

என்று விளக்கம் எழுதுகிறார். மேலும், கற்புடை மகளிர்க்குக் கணவரே தெய்வம் அதனால் அவர் பிற தெய்வம் தொழுதல் இழுக்கு என்றும் அதற்கு, "தெய்வம் தொழாஅள்." (குறள். 55) என்ற திருக்குறளையும் துணைக்கு எடுத்துக்கொள்கிறார்.

தமிழ்ப் பண்பாட்டுப் பின்புலத்தில் கண்ணகியின் கற்பு பற்றிய ஆய்வை மேற்கொண்ட ஆய்வாளர்களான தெ.பொ.மீ, மு.வ, நா.மு.வேங்கட சாமி நாட்டார், சிதம்பர ரகுநாதன் செட்டியார், ரா.பி.சேதுப்பிள்ளை போன்றோரும்[9] இக்கருத்தைப் பேசுகின்றனர். ஆனால், கண்ணகியின் கற்பு ஒழுக்கம் பற்றிய எதிர்க் கருத்தும் முன்வைக்கப்படுகிறது. இ.நாராயணன்[10], பொ.திருகூடசுந்தரம்[11] போன்றோர் அதில் குறிப்பிடத்தக்கவராவர். கண்ணகி கற்பு பற்றிய இந்த கருத்து மோதல் ஒருபுறம் இருந்தாலும் காப்பியத்தில் கற்பு பற்றிய செய்தியின் பின்புலத்தில் இரண்டு விஷயங்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டியவையாக உள்ளன.

ஒன்று கற்பு என்ற சொல்லாடல் பயன்படுத்தப்பட்டுள்ள முறை.

இரண்டு கண்ணகி தேவந்தியின் வேண்டுதலை நிராகரித்ததன் பின்புலம்.

இவற்றில் முதலாவதான கற்பு என்ற சொல்லாடல் காப்பியத்தில் ஆணுக்கு அடிமையாக இருத்தல் என்ற பொருளில் தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதை பொ. திரிகூட சுந்தரம்[12] தெளிவாக விளக்கியுள்ளார். அதை உள்ளவாறே ஏற்றுக்கொள்ளலாமம். எனவே, அது குறித்து இங்கு விவாதிக்க வேண்டிய தேவையில்லை.

இரண்டாவதான, தேவந்தியின் வேண்டுதலை நிராகரித்ததன் பின்புலம் குறித்து இனிப் பார்க்கலாம்.

கண்ணகியைப் பிரிந்த கோவலன் நீண்ட இடைவெளிக்குப் பிறகு இரவுப்பொழுதில் திரும்பி வருகிறான். அவ்வாறு அவன் வரும் வேளையில் தான் தேவந்திக்கும் கண்ணகிக்கும் இடையேயான உரையாடல் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

தேவந்தியின் வேண்டுகோளை "பெருமையன்று" என்று மறுக்கும் கண்ணகி, அதற்கான காரணம் குறித்து ஏதும் பேசாமல் மௌனமாக இருக்கிறாள். சரியாக அப்பொழுதுதான் அங்கு வந்து சேருகிறான் கோவலன்.

ஒருவேளை கோவலன் வரத் தாமதமாகியிருந்தால் கண்ணகியின் மறுப்பிற்கான காரணம் அங்கேயே தெரிந்திருக்கும். கோவலன் வந்துவிட்ட காரணத்தினால் அவளது அந்த மறுப்பதற்கான காரணத்தை அறிந்து கொள்ள கொலைக்களக் காதை வரை காத்திருக்க வேண்டி உள்ளது.

கொலைக்களக் காதையில் அவள் (கண்ணகி) கோவலனோடு பேசுகிற போதுதான் அது வெளிப்படுகின்றது. அதுவும், வீண் வம்புகள் பேசுபவர்களும் பரத்தைகளுடனும் வாழ்ந்து வீணாப்போன என்னுடன் எழுக என எழுந்தாய் என் செய்தனை (சிலம்பு.16:61-70) என்ற வருத்தத்துடனான அவனது வினாவிற்கான பதிலுரையாகவே அது அமைந்துள்ளது.

அவளது அந்த உரையில், அறவோர்க்கு அளித்தல், அந்தணர்களை போற்றுதல், துறவிகளை எதிர்கொண்டு பணிவிடை செய்தல், சான்றோர்கள் போற்றும் விருந்தினரை உபசரித்தல் ஆகியவற்றை இழந்தேன் (சிலம்பு 16:75-80) அதற்குக் காரணம், போற்றுதல் இல்லாத ஒழுக்கத்தை நீங்கள் புரிந்ததுதான். உங்களுடைய வார்த்தைகளுக்கு மாற்றாக எதுவும் மனதில் கொள்ளாத வாழ்க்கையை உடையவள் நான் (சிலம்பு 16:81,82) என்று "பீடன்று" என்ற கனாத் திறம் உரைத்த காதையில் அமுங்கிய கண்ணகியின் மௌனம் கலைகிறது.

நள்ளிரவில் வீட்டிற்கு வரும் கோவலன் அவளை உடனழைத்துக் கொண்டு அங்கிருந்து மதுரையை நோக்கி அவசரகதியில் உடனே புறப்படுகிறான். ஏறக்குறைய மூன்று மாதங்கள் மதுரையை நோக்கியே பயணம் நீளுகிறது.

அந்த நீண்ட பயணத்தில் எங்கும் அவள் கோவலனோடு இணைந்து பேசி உறவாடியதாகச் சொல்லப்படவில்லை. இடையே கவுந்தியடிகளுடன் தான் கோவலன் தொடர்ந்து பேசிக்கொண்டு செல்கிறான். அதனால் அவளது மனதில் புதைந்து கிடந்த அவனைப் பற்றிய கருத்தைச் சொல்வதற்கான வாய்ப்பு தொடர்ந்து அவளுக்குக் கிடைக்காமல் இருந்தது. என்றாலும், அவளது நடத்தை அதை வெளிக்காட்டாமல் இல்லை. தன்னுடைய செயலுக்காக வருந்தி நிற்கும் கோவலனைக் கண்டதும், சிறு நகைப்பைக் காட்டி சிலம்பு உள்ளது எடுத்துக்கொள்ளுங்கள் *(சிலம்பு.9:72,73)* என்றாள்.

அவளது அந்தச் சிறு நகையை அவனது ஒழுக்கமற்ற செயலைப் பற்றிய அவளது எண்ணத்தின் வெளிப்பாடேயன்றி, "அவன் எப்பொழுது வருவான். தன்னுடைய காலில் உள்ள சிலம்பைக் கழட்டி அவனிடம் கொடுக்கலாம்" என்று அவள் எதிர்பார்த்துக் காத்து இருந்ததாக கற்பனை செய்து கொள்ள முடியாது. ஒருவேளை அவன் மதுரைக்குப் புறப்பட்டுச் செல்லாமல் இருந்திருந்தால் கொலைக்களக் காதையில் வெளிப்படுத்திய "பீடன்று" என்பதற்கான விளக்கத்தை அவள் இல்லத்திலே வெளிப்படுத்தி இருப்பாள் என்பதை நம்பலாம்.

மேலும், இந்த இடத்தில் இன்னொன்றையும் யோசித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. அது கோவலனின் அவசர மதுரை நோக்கிய பயணம். கோவலனின் பயணம் குறித்து ஆராய்ந்த பஞ்சாங்க நான் தான் மனமுடைந்து முட்டாள்தனமாக முடிவெடுத்தேன் என்றால் நீயாவது யோசித்து இந்தப் பேதையின் முடிவை தடுத்து இருக்கலாம் அல்லவா என்ற தன்னிரக்கம் தான் வெளிப்படுகிறது. எனவே, கோவலனின் பயணத்தை ஒரு மனவியல் தேவையின் வெளிப்பாடாக் கொள்ளலாமேதவிர வணிகப்பயணமாகக் கொள்ள முடியாது. இந்த மன நெருக்கடி கோவலனுக்குப் பயணத்தின் தொடக்கத்தில் மட்டுமல்ல சிலம்பை விற்பதற்காக அவன் எடுக்க முயற்சியிலும் வெளிப்படுகிறது[13] என்ற கோவலனின் மன வேதனை குறித்தும், அவன் மதுரைக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கவில்லை என்றால், தற்கொலைகூட செய்து கொண்டிருப்பான்[14] என்ற இரு விளக்கங்கள் கோவலன் வாழ்க்கையில் ஏற்பட்ட நெருக் கடி குறித்து விளக்குகிறது. என்றாலும், கோவலனுக்கு உண்டான அந்த நெருக்கடிக்கு மாதவியுடனான பிரிவை மட்டுமே காரணம் காட்டுவது பொருத்தமாக இருக்காது. அவனது காம விருப்பதினால் நிகழ்ந்த ஒழுக்கக்கேட்டின் விளைவுதான் அந்த முடிவை எடுக்கத் தூண்டி இருக்கும் என்றும், அந்த ஒழுக்கக்கேடான வாழ்க்கையில் இருந்து விடுபடுவதே அவனது அப்போதைய தேவையாக இருந்திருக்கும் என்பதையும் இதிலிருந்து பெற்றுக்கொள்ள முடிகிறது.

இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்துப் பார்க்கிறபோது கண்ணகியின் "பீடன்று" என்பதற்கான உண்மைப் பொருள் "கோவலனின் ஒழுக்கத்தின் காரணமாக தனக்கு இனி எந்தக் காலத்திலும் பெருமை உண்டாகாது என்பது தான்" என்பதைத் தெளிவாக அறிய முடிகிறது.

### முடிவுரை

கோவலன் மாதவி இடையிலான பிரிவிற்கான அடிப்படைக் காரணம் மாதவி தன்னை மதிக்கவில்லை என்று கருதிய குற்ற உணர்வுதான் என்பதை உறுதியாகச் சொல்லலாம்.

கோவலனின் வறுமைக்கான காரணங்கள் பல. வரம்பில்லாமல் கொடை கொடுத்தது, ஊதாரித்தனமாக செலவு செய்தது என அது நீள்கிறது. என்றாலும், அது அவனது தனிப்பட்ட விருப்பத்தின் அடிப்படையில் மட்டுமே நிகழ்ந்திருக்கிறது.

மாதவி தன்னுடைய தேவையை நடனக் கலை மூலம் வரும் செல்வத்தை வைத்து பூர்த்தி செய்து கொண்டுள்ளாள் என்பதையும் மறுப்பதற்கில்லை. அதனால் அவள் தன் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளக் கோவலனை நம்பி இருக்கவில்லை என்பது தெளிவாகிறது. எனவே கோவலனுக்கு ஏற்பட்ட வறுமைக்கும் மாதவிக்கும் எவ்வித்த் தொடர்பும் இல்லை என்பதை ஐயத்திற்கு இடமின்றி புரிந்துகொள்ள முடிகிறது.

பீடன்றுஎன்றுகண்ணகி இருந்ததுஎன்பது தமிழ்ப் பண்பாட்டின் மீது அக்கறை உள்ள அறிஞர்கள் சொல்லும் விளக்கத்தின்படி அது தமிழ்ப் பண்பாட்டின் விளக்கமாகக் கொள்ள முடியாது. ஏனெனில், அது கோவலனுக்கு அடங்கி இருக்கிற கண்ணகியின் அடிமை உணர்வின் வெளிப்பாடு. கோவலனின் தொடர் ஒழுக்கக்கேடான செயல்களால் இனித் தனக்கு எப்படிப் பெருமை ஏற்படும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடாகவும், ஆணுக்கெதிராக வெளிப்படாமல் அடங்கியிருந்த கண்ணகியின் மனநிலையின் வெளிப்பாடாகவும் அதைப் பார்ப்பதுதான் காப்பியத்தில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களுக்குப் பொருத்தமுடையதாக இருக்கும்.

## குறிப்பு விளக்கம்

1. பஞ்சாங்கம், க. (2010) (முதல் பதிப்பு). *இலக்கியத் திறனாய்வு (பஞ்சாங்கம் கட்டுரைகள் II)*, காவ்யா வெளியீடு, ப.173.
2. மேலது, ப.305.
3. திருகூட சுந்தரம், பொ. (1967). *சிலப்பதிகாரம் (சொர்ணம்மாள் நினைவுச் சொற்பொழிவுகள்)*, (முதல் பதிப்பு) அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் நூல் வெளியீடு, பக்.5 - 40.
4. மேலது, ப. 96.
5. நடராசன், தி.சு. 2015 (முதல் பதிப்பு). *சிலப்பதிகாரம் மறுவாசிப்பு*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், ப.23
6. திருகூட சுந்தரம், பொ. (1967) (முதல் பதிப்பு). சிலப்பதிகாரம் (சொர்ணம்மாள் நினைவுச் சொற்பொழிவுகள்), அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் நூல் வெளியீடு, ப.102.
7. சாமி. சிதம்பரனார், *சிலப்பதிகாரத் தமிழகம்*, 2008 (முதல் பதிப்பு) அறிவுப் பதிப்பகம், ப.134.
8. பஞ்சாங்கம், க. 2010 (முதல் பதிப்பு). *இலக்கிய திறனாய்வு* (பஞ்சாங்கம் கட்டுரைகள் II), காவ்யா வெளியீடு, ப. 231.
9. மேலது பக்.304 மற்றும் 308.
10. ப.304,
11. திருகூட சுந்தரம், பொ. 1967, (முதல் பதிப்பு). சிலப்பதிகாரம் (சொர்ணம்மாள் நினைவுச் சொற்பொழிவுகள்), அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் நூல் வெளியீடு (பக்.5-40), என்ற நூலில், கண்ணகியின் ஆறிய கற்பு, சீறிய கற்பு என்று இரு பகுதிகளாகப் பிரித்து விரிவாக விளக்குகிறார். முடிவில் கண்ணகியின் கற்பு என்பது ஆணுக்கு அடங்கி இருக்கும் அடிமை குணமே என்று உரிய தரவுகளுடன் தெளிவுபடுத்துகிறார்.
12. மேலது.
13. பஞ்சாங்கம், க. 2010 (முதல் பதிப்பு). இலக்கிய திறனாய்வு (பஞ்சாங்கம் கட்டுரைகள் II), காவ்யா வெளியீடு, ப. 140.
14. மேலது, ப.139.

## பயன்பட்ட நூல்கள்

1. இறைக்குருவனார், திருக்குறள் மணி புலவர். 1983 (மறுபதிப்பு- 1).*சிலம்பில் பிழையா (ம. பொ. சி. க்கு மறுப்பு)*, சென்னை, தமிழ் கொடி பதிப்பகம்.
2. சிதம்பரனார், சாமி. 2008, *சிலப்பதிகாரத் தமிழகம்*, சென்னை, அறிவுப் பதிப்பகம்.

3. சுப்பிரமணியன், முனைவர் ச.வே., *கானல் வரி*, 2002, சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
4. திருகூட சுந்தரம், பொ. (1967), சிலப்பதிகாரம் (சொர்ணம்மாள் நினைவுச் சொற்பொழிவுகள்), அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் நூல் வெளியீடு.
5. நடராாசன், தி.சு. 2015. *சிலப்பதிகாரம் மறுவாசிப்பு*, சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்,.
6. பஞ்சாங்கம், க. (2010) (முதல் பதிப்பு) *இலக்கியத் திறனாய்வு* (பஞ்சாங்கம் கட்டுரைகள் II), கோடம்பாக்கம், சென்னை, காவ்யா வெளியீடு.
7. மீனாட்சி சுந்தரனார், தெ. பொ., 2005 (முதல் பதிப்பு), *சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம் தெ.பொ.மீ களஞ்சியம் - 4*, சென்னை, காவ்யா வெளியீடு.